# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 11,617 — 1958 දෙසැම්බර් 16 වැනි අඟහරුවාදා — 16.12.1958**

**11,617 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு மார்கழி மாதம் 16 ந் திகதி செவ்வாய்க்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இலக்கம் : கே. எல். 53 — **மீன்கருவாடும் இறால் கருவாடும்.**

**1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்**

**கட்டளை**

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவோடு 3 (2) ம் உட்பிரிவினால் என்மேற் பாரிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, களுத்துறை மாவட்ட உதவி (உணவு) விலைக் கட்டுப்பாட்டதிகாரி, வில்பிரெட் பிரான்சிஸ் பேர்டினந்து ஆகிய யான், இக்கட்டளையால்—

(i) இதனோடிருக்கும் முதலாம் அட்டவணையின் 2 ம் பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே நிகர அந்தர் ஒன்றின் மொத்த விற்பனையாளரின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையாக விதிக்கிறேன். குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியின் நேரொத்த பதிவில் விவரிக்கப்பட்டுள்ள வர்ணனையைக்கொண்ட மீன் கருவாட்டையும் இறால் கருவாட்டையும் இந்த விலைகளுக்குக் கூடுதலாக களுத்துறை மாவட்ட எல்லைக்குள் விற்றலாகாது ;

(ii) இதனோடிருக்கும் இரண்டாம் அட்டவணையின் 2 ம் பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே நிகர இருத்தல் ஒன்றின் சில்லறை வியாபாரியின் ஆகக் கூடிய சில்லறை விலையாகவும் விதிக்கிறேன். குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியின் நேரொத்த பதிவில் விவரிக்கப்பட்டுள்ள வர்ணனையைக்கொண்ட மீன் கருவாட்டையும் இறால் கருவாட்டையும் இந்த விலைகளுக்குக் கூடுதலாக களுத்துறை மாவட்ட எல்லைக்குள் விற்றலாகாது ;

(iii) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) எத்தொகையான மீன் கருவாட்டையோ அல்லது இறால் கருவாட்டையோ திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது ஒரு மொத்த அந்தரைக் கொண்ட தொகையில் அல்லது அதிற் கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(ஆ) ஒரு அந்தருக்குக் குறைந்த எத்தொகையான மீன் கருவாட்டையோ அல்லது இறால் கருவாட்டையோ பாவிப்புக்காக அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(இ) "மொத்த விற்பனையாளர் ஒருவர்" என்பதன் பொருள் வழக்கமாக மீன் கருவாடும் இறால் கருவாடும் மொத்த விற்பனை செய்யும் ஒருவரையே குறிக்கும் ;

(ஈ) களுத்துறை மாவட்ட எல்லைக்குள் நடைமுறையில் இருப்பதற்காக விதிக்கப்பட்டுள்ள "மொத்த வியாபாரியினது நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விலை" என்பது மொத்த விற்பனையால் நடாத்தப்படும் விற்பனை யாவற்றையும் குறிப்பதாகும் ;

(உ) "ஆகக் கூடிய சில்லறை விலை" என்பது எல்லாச் சில்லறை விற்பனைகளையும் குறிக்கும் ;

(ஊ) "காய்ந்த மீன்" என்பது கருவாட்டையே குறிப்பதாகும் ;

(iv) இக்கட்டளையால் ஆகக் கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், ஏவசாவது குறித்த முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியிலும் இரண்டாம் அட்டவணையின் 1 ம் பத்தியிலும் விவரிக்கப்பட்டுள்ள வர்ணனையைக்கொண்ட மீன் கருவாட்டை அல்லது இறால் கருவாட்டை வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாதென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(v) இக்கட்டளையால் ஆகக் கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியிலும் இரண்டாம் அட்டவணையின் 1 ம் பத்தியிலும் விவரிக்கப்பட்டுள்ள வர்ணனையைக்கொண்ட மீன் கருவாட்டை அல்லது இறால் கருவாட்டைத் தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது எவ் வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில், குறித்த முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியிலும் இரண்டாம் அட்டவணையின் 1 ம் பத்தியிலும் விவரிக்கப்பட்டுள்ள அப்பொருட்களுக்கு அவ்விடப்பரப்பில் இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக் கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(vi) இக்கட்டளையின் நோக்கத்துக்காக "இருத்தல்" அல்லது "இரு." என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் முறையாகக் கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(vii) இக்கட்டளையால் ஆகக் கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விவரித்துள்ள மீன் கருவாட்டை அல்லது இறால் கருவாட்டை மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், குறித்த இரண்டாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விவரித்துள்ள மீன் கருவாட்டை அல்லது இறால் கருவாட்டைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருட்களை வாங்குவோர் கேட்குமிடத்து, அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;
(ஆ) விற்பனை செய்யப்பட்ட பொருளின் வர்ணனை ;
(இ) விற்ற பொருளின் மொத்த நிகர நிறை ;
(ஈ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;
(உ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது ;

(viii) குறித்த முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியிலும் இரண்டாம் அட்டவணையின் 1 ம் பத்தியிலும் விவரிக்கப்பட்டுள்ள மீன் கருவாடும் இறால் கருவாடும் விற்கப்படுமிடத்து, முதலாம் அட்டவணையின் 2 ம் பத்தியிலும் இரண்டாம் அட்டவணையின் 2 ம் பத்தியிலும் குறிக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய விலைகளில், அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(ix) இதனோடிருக்கும் அட்டவணைகளின் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் கும்பளா, பொம்பிலி, நெத்தலி, இறால் கருவாடு முதலியவை தவிர்ந்த மற்றைய எந்த மீன் கருவாடோ எவ்விதமாக வெனினும் விற்கப்படின் அவைகளின் விற்பனை விலை, மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக்குறைந்தது கழிவாக 10 இறுத்தல் குறைத்துக் கணக்கிடப்படு மென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(x) இக்கட்டளையால், இதனோடிருக்கும் அட்டவணைகளின் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் கும்பளா கொள்கலங்களில் எவ்வித மாகவோ விற்கப்படின் அதன் விற்பனை விலை, மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக் குறைந்தது கழிவாக 25 இறுத்தல் குறைத்துக் கணக்கிடப்படும் ;

(xi) இக்கட்டளையால், இதனோடிருக்கும் அட்டவணைகளின் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் பொம்பிலி கொள்கலங்களில் எவ்விதமாகவோ விற்கப்படின், அதன் விற்பனை விலை, மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக் குறைந்தது கழிவாக 8 இறுத்தல் குறைத்துக் கணக்கிடப்படும் ;

(xii) இக்கட்டளையால், இதனோடிருக்கும் அட்டவணைகளின் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் நெத்தலி கொள்கலங்களில் எவ்விதமாகவோ விற்கப்படின் அதன் விற்பனை விலை, மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக் குறைந்தது கழிவாக 20 இறுத்தல் குறைத்துக் கணக்கிடப்படும் ;

(xiii) இக்கட்டளையால், இதனோடிருக்கும் அட்டவணைகளின் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் புற ஓடற்ற இறால் கருவாடு அல்லது புற ஓடுள்ள இறால் கருவாடு கொள்கலங்களில் விற்கப்படின் அதன் விற்பனை விலை மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக் குறைந்தது கழிவாக 15 இறுத்தல் குறைத்துக் கணக்கிடப்படும் ;

(xiv) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " நிகர " என்பது மீன் கருவாட்டின் அல்லது இறால் கருவாட்டின் கழிவு அல்லது வெறும் நிறை குறைந்த மொத்த நிறையாகும்.

1958 ம் ஆண்டு மார்கழி மாதம் 6 ந் திகதி, முற்பகல் 11.00 மணிக்குக் களுத்துறையில் கைச்சாத்திடப்பட்டது.

டபிள்யூ. எப். பேர்டினந்து,
களுத்துறை மாவட்ட உதவி (உணவு), விலைக் கட்டுப்பாட்டதிகாரி.

**முதலாவது அட்டவணை**

| பத்தி 1 விபரம் | பத்தி 2 நிகர அந்தர் ஒன்றின் மொத்த விற்பனையாளரின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை ரூ. ச. |
|---|---|
| அறக்குளா தலையில்லாமல் | 119 45 |
| அறக்குளா தலையுடன் | 100 31 |
| கட்டா தலையில்லாமல் | 87 91 |
| முழுக்கட்டா | 67 22 |
| அஞ்சீலா தலையுடன் | 61 01 |
| அஞ்சீலா தலையில்லாமல் | 65 18 |
| பாரை தலையில்லாமல் | 98 25 |
| பாரை தலையுடன் | 79 63 |
| கொடுவா தலையில்லாமல் | 87 91 |
| கொடுவா தலையுடன் | 63 92 |
| சூரை | 87 91 |
| தொண்டன் | 67 22 |
| கும்பளா | 28 44 |
| பொம்பிலி | 19 63 |
| நெத்தலி | 75 61 |
| ஓடற்ற இறால் கருவாடு | 119 45 |
| ஓடுள்ள இறால் கருவாடு | 94 11 |

**இரண்டாவது அட்டவணை**

| பத்தி 1 விபரம் | பத்தி 2 நிகர இறுத்தல் ஒன்றின் சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய சில்லறை விலை ரூ. ச. |
|---|---|
| அறக்குளா | 1 27 |
| கட்டா | 0 90 |
| அஞ்சீலா | 0 72 |
| பாரை | 1 03 |
| கொடுவா | 0 88 |
| சூரை | 0 98 |
| தொண்டன் | 0 72 |
| கும்பளா | 0 31 |
| பொம்பிலி | 0 93 |
| நெத்தலி | 0 88 |
| ஓடற்ற இறால் கருவாடு | 1 14 |
| ஓடுள்ள இறால் கருவாடு | 0 88 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை **ஆகக்கூடிய** விலை களாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

உணவு விலைக் கட்டளை இல : வி. 54

உப உணவுப் பொருட்கள்.

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

## கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு வவுனியா மாவட்டத்தின் உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி, பராசசேகரம்பிள்ளை தம்பையா ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) கீழ்க்காணும் உணவு விலைக் கட்டளைகளை இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன் :—

1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ந் திகதியைக்கொண்ட 11,508 ம் இலக்க விசேட இலங்கை வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ந் திகதியைக்கொண்ட 50 ம் இலக்கமுள்ள உணவு விலைக் கட்டளையையும் ;

1958 ம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ந் திகதியைக்கொண்ட 11,580 ம் இலக்க விசேட இலங்கை வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21 ந் திகதியைக்கொண்ட 52 ம் இலக்கமுள்ள உணவு விலைக் கட்டளையிலும் விபரிக்கப்பட்டிருக்கும் மொத்த வியாபாரிகளின் ஆகக்கூடிய சில்லறை விலைகள் முதலியவையைப் பொறுத்தமட்டில் விபரிக்கப்பட்டிருக்கும் முதலாம் அட்டவணையில் காணப்படும் விலைகளையும் 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள உருளைக் கிழங்குக்கு பற்றிய எனது விலைக் கட்டளைகளை இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன் ;

(2) இதனோடிருக்கும் அட்டவணையில் 2 ம், 3 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே நிகர அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையாகவும், சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். குறித்த முதலாம் அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் எல்லைக்குள் குறித்த விலைகளினும் பார்க்க கூடுதலாக விற்றலாகாது ;

(3) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) குறிக்கப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் பொருட்களில் எத்தொகையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது ஒரு பொருளின் நிறை உள்ள 28 றுத்தல் நிறை உள்ள பொருள் அல்லது அதிற்கூடிய தொகை ஒரு தடவையில் விற்றல் மொத்த விலையாகவே கருதப்படுமென்றும் ;

(ஆ) குறிப்பிட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் பொருட்களில் 28 றுத்தலுக்கு குறைந்த எப்பொருளையாவது பாவிப்புக்கு அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன் ;

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பினும் குறித்த அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன் ;

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பினும் குறித்த முதலாம் அட்டவணையில 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் குறித்த முதலாம் அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளுக்கு அவ்விடப்பரப்பில் இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(6) இக்கட்டளையின் நோக்கத்துக்காக "இருத்தல்", "இரு." என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன் ;

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பினும் குறித்த முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், குறித்த அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் எப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;
(ஆ) விற்றபொருளின் தொகை (நிறையில்) ;
(இ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;
(ஈ) எவ்விதமான விற்பனை அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது ;

(8) குறித்த அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து அட்டவணையில் 2 ம், 3 ம் பத்திகளில் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய மொத்த விலைகளையும் சில்லறை விலைகளையும் அல்லாது விற்கப்படும் பொருளைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(9) ஒல்லாந்திலிருந்து இறக்குமதியாகும் மரப்பெட்டிகளில் (கிறேற்ஸ்) அடைக்கப்பட்ட உருளைக்கிழங்கின் மொத்த இருத்தல் ஒன்றின் விற்பனை விலை ஒரு மரப்பெட்டிக்கு (கிறேற்றுக்கு) 10 றுத்தல் கழித்துக் கணக்கிடல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(10) சீனாவுக்கு இறக்குமதியாகும் மரப்பெட்டிகளில் (கிறேற்றில்) அடைக்கப்பட்ட உருளைக்கிழங்கின் மொத்த இருத்தல் ஒன்றின் விற்பனை விலை ஒரு மரப்பெட்டிக்கு (கிறேற்றுக்கு) 13 றுத்தல் கழித்துக் கணக்கிடல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(11) யப்பானிலிருந்து இறக்குமதியாகும் மரப்பெட்டிகளில் (கிறேற்றில்) அடைக்கப்பட்ட உருளைக் கிழங்கின் மொத்த இருத்தல் ஒன்றின் விற்பனை விலை ஒரு மரப்பெட்டிக்கு (கிறேற்றுக்கு) 25 றுத்தல் கழித்துக் கணக்கிடல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(12) மரப்பெட்டிகளல்லாத (கிறேற்கள்) மற்றைய எவ்வித கொள்கலத்தில் இருந்து உருளைக்கிழங்கு விற்பனை செய்யப்படின் விற்பனை விலை ஒவ்வொரு கொள்கலத்திற்கும் மொத்த இருத்தலில் இருந்து 3 இருத்தல் கழித்துக் கணக்கிடல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(13) இக்கட்டளையின் பொருட்டு "நிகர" என்பது உருளைக் கிழங்கின் கழிவு அல்லது வெற்று நிறை குறைந்த மொத்த நிறையெனக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1958 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 9 ந் திகதி, காலை 11 மணிக்கு வவுனியாவில் கையொப்பமிடப்பட்டது.

ப. தம்பையா,
பிரதி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
வவுனியா (பகுதி).

### முதலாம் அட்டவணை

வவுனியா தெற்கு (தமிழ்) பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த ஆசிகுளம், வவுனியா நொச்சிமோட்டை, நெடுங்குளமும் புதுக்குளமும் வவுனியா தெற்கு (சிங்கள) பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த மடுக்கந்தையும், ஈரப் பெரியகுளமும்

| | பத்தி 1 | பத்தி 2<br>மொத்த வியாபாரியின் நிகர அந்தர் ஒன்றின் ஆகக் கூடிய மொத்த விற்பனை விலை | பத்தி 3<br>நிகர இருத்தல் ஒன்றின் ஆக்க் கூடிய சில்லறை விலை |
|---|---|---|---|
| நம். | | ரூ. ச. | ரூ. ச. |
| 1 | உருளைக்கிழங்கு .. | 31 40 | 0 33 |

## இரண்டாம் அட்டவணை

| நம். | பத்தி 1<br>பகுதி | பத்தி 2<br>முதலாம் அட்டவணையில் 2 ம் பத்தியில் குறித்த விலையினும் பார்க்க மொத்த வியாபாரி நிகர அந்தர் ஒன்றுக்கு சேர்ந்து விற்கும் விலை<br>ரூ. ச. | பத்தி 3<br>முதலாம் அட்டவணையில் 3 ம் பத்தியில் குறித்த விலையிலும் பார்க்க ஒரு சில்லறை வியாபாரி இருத்தல் ஒன்றுக்கு சேர்த்து விற்கும் சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| 1 | வவுனியா தெற்கு இறைவரி உத்தியோகத்தர் தமிழ் பிரிவுக்குச்சேர்ந்த மருதங்குளம், மருதமடு, இராசேந்திரன்குளம்<br>வவுனியா தெற்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் (சிங்கள) பிரிவுக்குச் சேர்ந்த சூடு வெந்த புலவு, மருதமடுவைத் தவிர்ந்த உலுக்குளம் | 0 25 | 0 01 |
| 2 | வவுனியா தெற்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் தமிழ் பிரிவுக்குச் சேர்ந்த பெரிய புளியங்குளம், வாகை கட்டின ஒலுக்குளம், வாழை வைத்தகுளம், வவுனிதெற்கு இறைவரி உத்தியோகத்தர் (சிங்கள) பிரிவில் உலுக்குளம் பகுதிக்குச் சேர்ந்த மருதமடு கிராம விதானையின் பகுதி | 0 50 | 0 01 |
| 3 | வவுனியா வடக்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த நெடுங்கேணி, மாங்குளம், ஒலுமடு, கனகராயன்குளம், புளியங்குளம் | 0 50 | 0 01 |
| 4 | வவுனியா வடக்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த பரந்தன், மணவாளன்பட்ட முறிப்பு, தண்டுவான் கச்சிலமடுவும் ஊஞ்சல் கட்டியும் | 0 75 | 0 02 |
| 5 | வவுனியா கரை துறைப்பற்று பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த முள்ளியவளை, தனியூற்று, முல்லைத்தீவும், வாளை முள்ளிவாய்க்காலும் | 1 00 | 0 02 |
| 6 | வவுனியா கரைதுறைப்பற்று பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த குமுளமுனை, புதுக்குடியிருப்பும், அம்பலவன் பொக்கணையும் | 1 25 | 0 02 |
| 7 | வவுனியா கரைதுறைப்பற்று பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த கொக்கிளாயும் கொக்குத் தொடுவாயும் | 1 50 | 0 03 |

**குறிப்பு** :—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருள்களை விற்றலாகாது.

---

உணவு விலைக் கட்டளை இல. MT/13/58 **மீன் கருவாடும் இறால் கருவாடும்**

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினுல் அச்சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் (மாத்துறை டிஸ்திறிக்) உப விலைக் கட்டுப்பாட்டதிகாரிக்கு (உணவு), அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு, ஹெட்டிகே டொன் டியுடர் போதிதாஸ ஆகிய யான் இக்கட்டளையால்—

(1) 1958 ம் ஆண்டு ஜூன் மாதம் 24 ந் திகதியைக்கொண்ட 11,371 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு ஜூன் மாதம் 19 ந் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட 7/58 என்னும் இலக்கமுள்ள உணவு விலைக் கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன் ;

(2) இதனேடிருக்கும் முதலாம் அட்டவணையின் 2 ம் பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே நிகர அந்தர் ஒன்றின் மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையாகவும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் நேரொத்த பதிவில் விவரிக்கப்பட்டுள்ள வர்ணனையைக்கொண்ட மீன் கருவாட்டையும் இறால் கருவாட்டையும் இந்த விலைக்குக் கூடுதலாக மாத்தறை நிர்வாக மாவட்ட எல்லைக்குள் விற்றலாகாது ;

(3) இதனேடிருக்கும் இரண்டாம் அட்டவணையின் 2 ம் பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே நிகர இருத்தல் ஒன்றின் சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய சில்லறை விற்பனை விலையாகவும் விதிக்கிறேன். குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் நேரொத்த பதிவில் விவரிக்கப்பட்டுள்ள வர்ணனையைக்கொண்ட மீன் கருவாட்டையும் இறால் கருவாட்டையும் இந்த விலைக்குக் கூடுதலாக மாத்தறை நிர்வாக மாவட்ட எல்லைக்குள் விற்றலாகாது ;

(4) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) எத்தொகையான மீன் கருவாட்டையோ அல்லது இறால் கருவாட்டையோ திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது ஒரு நிகர அந்தரைக்கொண்ட தொகையில் அல்லது அதிற்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனை யாகவே கருதப்படும் என்றும் ஆஞ்ஞைபிடுகிறேன ;

(ஆ) ஒரு நிகர அந்தருக்குக் குறைந்த எத்தொகையான மீன் கருவாட்டையோ அல்லது இறால் கருவாட்டையோ பாவிப்புக்காக அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(இ) " மொத்த வியாபாரி ஒருவர் " என்பதன் பொருள் எவ்வொருவரின் பெயரிலோ மீன் கருவாடு அல்லது இறால் கருவாடு மொத்த விற்பனையாகவே விற்றலாகும் ;

(ஈ) மாத்தறை நிர்வாக மாவட்ட எல்லைக்குள் விதிக்கப்பட்டுள்ள " மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய விலை " என்பது மொத்த வியாபாரி ஒருவரால் சில்லறை வியாபாரி ஒருவருக்கு மொத்த விற்பனை செய்வதைக் குறிக்கும் ;

(உ) " ஆகக்கூடிய சில்லறை விலை " என்பது எல்லாச் சில்லறை விற்பனைகளையும் குறிக்கும் ;

(ஊ) " காய்ந்த மீன் " என்பது " மீன் கருவாட்டையே " குறிக்கும் என்பதாம் ;

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், எவராவது குறித்த முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியிலும் இரண்டாம் அட்டவணையின் 1 ம் பத்தியிலும் விபரித்துள்ள வர்ணனையைக்கொண்ட மீன் கருவாட்டை அல்லது இறால் கருவாட்டை வேறெரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன் ;

(6) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியிலும், இரண்டாம் அட்டவணையின் 1 ம் பத்தியிலும் விவரித்துள்ள வர்ணனையைக் கொண்ட மீன் கருவாட்டை அல்லது இறால் கருவாட்டைத் தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத் திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் குறித்த முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தி யிலும் இரண்டாம் அட்டவணையின் 1 ம் பத்தியிலும் விவரித்துள்ள அப்பொருட்களுக்கு அவ்விடப்பரப்பில் இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்குவைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(7) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " இருத்தல் " அல்லது " இரு." என்பது அவ்வேளர்டுபோல் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் முறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன் ;

(8) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விவரித்துள் மீன் கருவாட்டை அல்லது இறால் கருவாட்டை மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும் குறித்த இரண்டாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விவரித்துள்ள மீன் கருவாட்டை அல்லது இறால் கருவாட்டைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருட்களை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;
(ஆ) விற்பனை செய்யப்பட்ட பொருளின் வர்ணனை ;
(இ) விற்ற பொருளின் மொத்த நிகர நிறை ;
(ஈ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;
(உ) எவ்விதமான விற்பனை அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது ;

(9) குறித்த முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியிலும், இரண்டாம் அட்டவணையின் 1 ம் பத்தியிலும் விவரித்துள்ள மீன் கருவாடும் இறால் கருவாடும் விற்கப்படும் இடத்து முதலாம் அட்டவணையின் 2 ம் பத்தியிலும், இரண்டாம் அட்டவணையின் 2 ம் பத்தியிலும் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது கொள்கலம் ஏதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(10) இக்கட்டளையால் இதனோடிருக்கும் அட்டவணைகளின் முதலாம் பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் கும்பளா, பொம்பிலி, நெத்தலி, இறால் கருவாடு முதலியவை தவிர்ந்த மற்றைய எந்த மீன் கருவாடோ எவ்விதமாகவெனினும் விற்கப்படின் அவைகளின் விற்பனை விலை, மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக்குறைந்தது கழிவாக 10 இறுத்தல் குறைத்துக் கணக்கிடப்படும் ;

(11) இக்கட்டளையால் இதனோடிருக்கும் அட்டவணைகளின் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் கும்பளா கொள்கலங்களில் எவ்விதமாகவோ விற்கப்படின் அதன் விற்பனை விலை மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக்குறைந்தது கழிவாக 25 இறுத்தல் குறைத்துக் கணக்கிடப்படும் ;

(12) இக்கட்டளையால் இதனோடிருக்கும் அட்டவணைகளின் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் பொம்பிலி கொள்கலங்களில் எவ்விதமாகவோ விற்கப்படின் அதன் விற்பனை விலை, மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக்குறைந்தது கழிவாக 8 இறுத்தல் குறைத்துக் கணக்கிடப்படும் ;

(13) இக்கட்டளையால் இதனோடிருக்கும் அட்டவணைகளின் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் நெத்தலி கொள்கலங்களில் எவ்விதமாகவோ விற்கப்படின் அதன் விற்பனை விலை மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக்குறைந்தது கழிவாக 20 இறுத்தல் குறைத்துக் கணக்கிடப்படும் ;

(14) இக்கட்டளையால் இதனோடிருக்கும் அட்டவணைகளின் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் புற ஓடற்ற இறால் கருவாடு அல்லது புற ஓடுள்ள இறால் கருவாடு கொள்கலங்களில் விற்கப்படின் அதன் விற்பனை விலை மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக்குறைந்தது கழிவாக 15 இறுத்தல் குறைத்துக் கணக்கிடப்படும் ;

(15) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " நிகர " என்பது மீன் கருவாட்டின் அல்லது இறால் கருவாட்டின் கழிவு அல்லது வெறும் நிறை குறைந்த மொத்த நிறையாகும்.

மாத்தறைக் கச்சேரியில் 1958 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 9 ந் திகதி, பி. ப. 4.15 மணிக்கு கையொப்பமிடப்பட்டது.

எச். டீ. டி. போதிதாஸ,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), மாத்தறை டிஸ்திறிக்.

## முதலாம் அட்டவணை

| பத்தி 1<br>விபரம் | பத்தி 2<br>மொத்த வியாபாரியின் நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விலை<br>ரூ. ச. |
|---|---|
| அறக்குளா தலையில்லாமல் .. | 117 75 |
| அறக்குளா தலையுடன் .. | 99 25 |
| கட்டா தலையில்லாமல் .. | 87 25 |
| முழுக் கட்டா .. .. | 67 25 |
| அஞ்சிலா தலையுடன் .. | 61 25 |
| அஞ்சிலா தலையில்லாமல் .. | 65 25 |
| பாரை தலையில்லாமல் .. | 97 25 |
| பாரை தலையுடன் .. .. | 79 25 |
| கொடுவா தலையில்லாமல் .. | 87 25 |
| கொடுவா தலையுடன் .. | 64 06 |
| சூரை .. .. | 87 25 |
| தொண்டன் .. .. | 67 25 |
| கும்பளா .. .. | 29 75 |
| பொம்பிலி .. .. | 79 00 |
| நெத்தலி .. .. | 75 00 |
| ஓடற்ற இறால் கருவாடு .. | 117 50 |
| ஓடுள்ள இறால் கருவாடு .. | 93 00 |

## இரண்டாம் அட்டவணை

| பத்தி 1<br>விபரம் | பத்தி 2<br>நிகர இறுத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|
| அறக்குளா .. .. | 1 25 |
| கட்டா .. .. | 0 89 |
| அஞ்சிலா .. .. | 0 72 |
| பாரை .. .. | 1 02 |
| கொடுவா .. .. | 0 87 |
| சூரை .. .. | 0 97 |
| தொண்டன் .. .. | 0 72 |
| கும்பளா .. .. | 0 32 |
| பொம்பிலி .. .. | 0 92 |
| நெத்தலி .. .. | 0 87 |
| ஓடற்ற இறால் கருவாடு .. | 1 12 |
| ஓடுள்ள இறால் கருவாடு .. | 0 87 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல ; இவைகள் **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேல் விற்றலாகாது.



இலங்கை அரசாங்க அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.